MADRAS
10 FEB 1964

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, 20th November 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at nine of the Clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

சந்தனமரங்கள் சாகுபடி

*** 309 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி:** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சந்தன மரங்கள் பயிராவதற்குத் தக்க மண்வளம் நமது மாநிலத்தில் எங்கெங்கு உள்ளது என்பதுபற்றி ஆராய்ச்சி செய்யப் பட்டிருக்கிறதா? விவரமென்ன?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: சந்தன மரங்கள் பயிராவதற்கு ஏற்ற நிலங்கள் எங்கெங்கு உள்ளன என்பது பற்றி நமது மாநிலத்தில் ஏற்கெனவே ஆராய்ச்சி நடத்தப்பட்டது. கோயம்புத்தூர் மாவட்டத்தின் வடபகுதி, தென் ஆற்காடு, வட ஆர்க்காடு மாவட்டங்களிலுள்ள மலைப் பகுதிகள், சேலம் மாவட்டம் முழுவதும், திருச்சி, இராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய இடங்களில் சில பகுதிகள் சந்தன மரங்கள் பயிராவதற்கு ஏற்றவையாகும்.

திரு. ஆ. கு. சுப்பையா: இப்பொழுது சந்தன மரங்கள் எந்தெந்த மாவட்டங்களில் பயிரிடப்பட்டு வருகின்றன?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: சுயமாக உற்பத்தியாவதுதான் சிறப்பாக வரும். கோவை மாவட்டத்தில் இந்த மரங்களைப் பயிரிடுவதற்குச் சில முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகிறோம்.

திரு. கே. பொன்னையன்: சந்தன மரங்கள் நம்முடைய ராஜ்யத்தில் ஏராளமாக இருக்கின்றன. அண்டை ராஜ்யமான மைசூரில் சந்தன எண்ணை பாக்டரி வைத்து, அதை விற்பதன்மூலம் வருடா வருடம் ரூபாய் ஐம்பது லட்சம் அல்லது அறுபது லட்சம் அந்நியச் செலாவணி கிடைக்கிறது. நம்முடைய ராஜ்யத்தில் அப்படி ஒரு பாக்டரியை ஏன் வைக்கக் கூடாது? இதை அரசாங்கம் பரிசீலிக்குமா?

10 FEB 1964 MADRAS

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இந்தப் பிரச்னைகள் இல்லாமலேயே நமக்கு ஏலத்தில் ஏராளமான தொகை வந்து கொண்டிருக்கிறது என்ற காரணத்தினுல், இதைப் பற்றி யோசிக்க வேண்டிய அவசியம் இல்லை.

தமிழில் பாடப் புத்தகங்கள்

* 310 **கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பயிற்சி மொழியாகத் தமிழை மேற்கொண்டிருக்கும் திட்டத்திற்கு ஊக்கம் ஊட்டும் வகையில் பாட நூல்கள் தமிழில் வெளியிடுவதற்கு அரசாங்கம் மேற்கொண்ட திட்டங்கள் யாவை ?

(இ) அதன் பயனுய் எவ்வளவு நூல்கள் வெளிவந்துள்ளன ?

(உ) அதற்காக செலவிட்ட தொகை எவ்வளவு ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) பாடப் புத்தகங்களையும் பொதுப் புத்தகங்களையும் தமிழில் வெளியிடுவதற்காக 1962 ஏப்ரலில் அரசாங்கம் தமிழ் வெளியீட்டுக் கழகத்தை அமைத்தது. அதன் செலவு முழுவதையும் மாநில அரசாங்கமே கொடுத்து வருகிறது.

(இ) 57.

(உ) ரூபாய் 1,73,680.

(*a*) The Bureau of Tamil Publications, functioning from April 1962, has been set up by this Government for the publication of both text books and general books in Tamil. It is financed entirely by the State Government.

(*b*) 57.

(*c*) Rs. 1,73,680.

திரு. கே. ஏ. மதியழகன் : சட்டசபை விதிகள் 40-வது விதியின் கீழ், "கேள்வி நேரத்தின்போது சபாநாயகரைக் கேட்டுக்கொள்வதன் மேல் சபாநாயகர், தமக்குப் பொருத்தமாகத் தோன்றினுல், பிரஸ்தாப தினத்தன்று ஒரு கேள்விக்கு விஷயமாக இருந்திருக்கிற அவசர முக்கியத்துவம் வாய்ந்த யாதொரு விஷயத்தைப் பற்றி ஓர் அங்கத்தினர் விவாதம் எழுப்பக் கூடியவராயிருக்கும் பொருட்டு, அந்த தினத்துக்குரிய அலுவல் முடிவடைந்த பிறகு அல்லது சபாநாயகர் நிச்சயிக்கக்கூடிய வேறு யாதொரு தினத்தன்று அரை மணி நேரம் அனுமதிக்கலாம்" என்று இருக்கிறது. தமிழைப் போதனு மொழியாக கல்லூரிகளில் புகுத்துவது சம்பந்தமாக, சர்க்கார் "பாடப் புத்தகங்கள் இல்லை, பாடப் புத்தகங்கள் இல்லை" என்று சொல்லிவருவதனுலும், உப கேள்விகள் மூலம் பரிபூரணமான தகவல்களைத் தெரிந்து கொள்ள முடியாது என்பதாலும், அருள் கூர்ந்து அரை மணி நேர விவாதத்தை அனுமதிக்குமாறு கனம் சபாநாயகர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.